FAMILY SERVICE TORONTO
For People. For Change.

வாழ்க்கைத் துணையைத் தாக்குதலுக்கு எதிரான சேவை

நீங்கள் அன்பு செய்பவர்களைத் துன்புறுத்துகின்றீர்களா? இதை நிறுத்துவதற்கு உங்களுக்கு நாங்கள் உதவி செய்யமுடியும்.

## அடக்குமுறையும், துன்புறுத்தலும்

மற்றவரை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முனையும் தேவையானது, சில ஆண்களை அவர்களது மனைவியரையோ, வாழ்க்கைத் துணைகளையோ அல்லது பெண் தோழியரையோ வன்முறைக்குள்ளாக்கித் துன்புறுத்தும் பழக்கவழக்கத்தைக் கொண்டிருக்க வழி சமைக்கின்றது. தமது வாழ்க்கைத் துணையின் நடவடிக்கைகளை தமது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க விரும்பும் ஆண்கள், தமக்குள் எழும் வேறுபாடுகளை வன்முறையற்ற விதத்தில் தீர்க்க முடியாதவர்களாயும், தமது கோபத்தை வாழ்க்கைத் துணை மீது காட்டுபவர்களாயும் இருக்கின்றார்கள். இதன் விளைவாக, இவர்கள் தமது குடும்பத்தை, வேலையை இழப்பதோடு சிறையிலும் அடைபட நேரிடலாம். இப்படியான ஆண்கள் வன்முறையற்ற விதத்தில் அதிகாரத்தைப்பகிர்ந்து வாழும் குடும்ப உறவைக் கொண்டிருப்பது எப்படி என்பதைக் கற்றுக்கொள்ளவும், தங்கள் வாழ்க்கைத் துணைவியரில் பழி போடுவதை நிறுத்தி, தமது செயலுக்கு தாமே பொறுப்பெடுத்து, பிரச்சனைகளை ஆக்கபூர்வமான விதத்தில் தீர்த்துக் கொள்ளவும் ரொறன்ரோ குடும்ப சேவை (Family Service Toronto) உதவுகின்றது. குடும்ப உறவில் ஒருவர் மற்றவருக்குப் பயந்து வாழும் நிலை வரும்போது அங்கே உண்மையான அன்புறவு சாத்தியமற்றுப்போகின்றது.

## நீங்கள் தனிமையில் இல்லை

ஒவ்வொரு வருடமும், நீதி மன்றினாலும், நன்நடத்தை-பிணை கண்காணிப்பு அலுவலகர்களாலும் எம்மிடம் அனுப்பப்படும் ரொறான்ரோ மாநகர்ப் பகுதியில் உள்ள நூற்றுக்கணக்கான ஆண்களுக்கு நாம் துணைநின்று உதவுகின்றோம். நீங்கள் மாறவேண்டும் என்ற எண்ணம் ஏற்கனவே உங்களுக்குத் தோன்றியிருக்கலாம். அல்லது அம் மாற்றம் பற்றி உங்களுக்கு சந்தேகம் கூடவந்திருக்கலாம். உங்கள் வாழ்க்கைத் துணைவியருக்கும், பிள்ளைகளுக்கும் நீங்கள் இழைத்த நோக்கோடு பற்றிய குழப்பமும் உங்களுக்கு இருக்கலாம். நீங்கள் எந்த நிலையில் இருந்தாலும் எமது பணி நிகழ்வு உங்களைத் தெளிவுபடுத்தி வழிகாட்டும். இப்பணியானது ஆங்கிலம், பாரசீகம், தமிழ் மொழிகளில் வழங்கப்படுகின்றது. அத்தோடு, ஒரு பால் உறவில் உள்ளவர்களுக்கும் இச்சேவை உண்டு.

## எம்மிடமிருந்து நீங்கள் எதிர்பார்பது என்ன?

ஆண்கள், தங்கள் செயலுக்கு பொறுப்பேற்று, தமது நடத்தையில் மாற்றத்தைக் கொண்டுவரத்தக்க விதத்தில் ஆதரவானதும், நம்பகமானதுமான சூழ்நிலையை உருவாக்கி உதவிவருகின்றோம். அவர்கள் அதிகாரத்தைப் பகிர்ந்து வாழும்

வாழ்க்கைத் துணையைத் தாக்குதலுக்கு எதிரான சேவை

வன்முறையற்ற உறவைக் கட்டியெழுப்பும் திறனைக் கற்றுக் கொள்வார்கள். இப்படியான குழுக்கள் அனுபமிக்க தொழில்சார் வல்லுனர்களால் வழிநடத்தப்படுகின்றன. தங்களைப் போன்ற சவால்களை எதிர்நோக்குகின்ற மற்றைய ஆண்களோடு தமது அனுபவத்தைப் பகிர்ந்துகொண்டு, வாழ்வில் மாற்றத்தைக் கொண்டு வர இக்குழு அமர்வுகள் இவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்குகின்றன. இத்திட்டத்தில் உள்ள ஆண்களினால் துன்புறுத்தப்பட்ட பெண்களோடு தொடர்புகொண்டு அவர்களுக்கு சேவை வழங்குவதும் சேர்க்கப்பட்டுள்ளது. நீங்கள் பின்வருபவற்றைக் கற்றுக்கொள்வீர்கள்:

- துன்புறுத்தும் நடத்தைக்கு மாற்றாக வன்முறையற்ற நடத்தை
- உங்கள் பிரச்சனைகளைப் பல வழிகளிலும் நோக்கி, நல்ல துணைவனாக, தந்தையாக செயற்பட உதவுவது
- உணர்சிகளையும், சிந்தனைகளையும் ஆக்கபூர்வமான வழிகளில் வெளிப்படுத்தி வன்முறையற்ற விதத்தில் முரண்பாடுகளைத் தீர்த்தல்

## எங்களோடு தொடர்பு கொள்ள……..

எங்கள் உதவியை நாட தீர்மானித்திருக்கும் ஆண்களோ அல்லது ரொறன்ரோ குடும்ப சேவை (Family Service Toronto) பற்றி ஆர்வமாக உள்ளவர்களோ அழைக்கவேண்டிய தொலை பேசி எண்: 416-595-9618.

இச் சேவைக்காக எமக்கு அளிக்கப்படும் நிதி உதவிக்கு வலுச்சேர்க்க பணிபெறுநருடமிருந்து கட்டணம் அறவிடப்படுகின்றது. இக்கட்டணமானது ஒருவரது குடும்ப வருமானம், குடும்ப அளவு என்பவற்றை மையமாக வைத்து தீர்மானிக்கப்படுகின்றது. இருப்பினும், பணம் செலுத்த இயலாமையைக் காரணம் காட்டி எவரும் திருப்பி அனுப்பப்பட மாட்டார்கள்.

இன, மத, நிற, மொழி, பாரம்பரிய, பிறப்பு இடம், குடியுரிமை, பால், வயது, உடல் குறைபாடு, கல்வி நிலை, திருமண நிலை, குடும்ப நிலை, வருமானம், அரசில் கொள்கை வேறுபாடின்றி எமது சேவைகளை ரொறான்ரோ நகரில் வசிக்கின்ற, பணியாற்றுகின்ற எவரும் பெற்றுக்கொள்ள முடியும்.

இச்சேவைக்கான நிதியுதவி ஒன்ராறியோவின் அரச வழக்கறிஞர் அமைச்சினால் வழங்கப்படுகின்றது.

எமது இணைய முகவரி: www.familyservicetoronto.org

For People For Change

FAMILY SERVICE TORONTO

United Way

Member Agency